**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை:திருமதி.S.சப்னா, B.B.M., L.L.M.,**
நீதித்துறைநடுவர், பல்லடம்.
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 27 ஆம் நாள்
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.292/2023**
CNR No.TNTI11- 001843 -2023

அரசுக்காக,
காவல்உதவி ஆய்வாளர்,
காமநாயக்கன்பாளையம், காவல் நிலையம்,
குற்ற எண்.122/2023. ... குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

வெள்ளியங்கிரி (வயது 40),
த/பெ. தண்டபாணி,
129 நாதேகவுண்டம்பாளையம்,
வடமலைபாளையம்,
பல்லடம் தாலுக்கா,
திருப்பூர் மாவட்டம். ......எதிரி

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.292/2023**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1(P.Dis.No.36/2021) படியும் விதி 106Criminal Rules of Practice –2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | Velliyangiri | 07.04.2023 | 07.04.2023 |
| (ii) | Date of filling of the complaint/final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 29.03.2023 | பல்லடம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 05.10.2023 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of the accused under section 294(b),324(ii) of IPC as the | 10.10.2024 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | case may be | | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | Cmp.No.5194/2024 | 10.10.2024 | Allowed |
| | | Cmp.No.5195/2024 | 10.10.2024 | Allowed |
| | | E-Cmp.No.75/2026 | 09.02.2026 | Allowed |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Karuppusamy | 25.03.2026 | 25.03.2026 |
| | | PW2- Moorthy | 25.03.2026 | 25.03.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 27.03.2026 |
| (viii) | Details of abscondance of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்தவழக்கானது கடந்த 27.03.2026 ஆம்தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 திரு.எஸ்.செந்தில் குமார், அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜீவரத்தினம், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1)இவ்வழக்கின் வாதி கருப்புசாமி எதிரி வெள்ளியங்கிரியின் தாயார் லட்சுமி என்பவருடன் தனியாக குடும்பம் நடத்தி வருவதாகவம் எதிரி வெள்ளியங்கிரி, ராஜ் என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாதி வீட்டிற்கு அருகில் தனியாக குடியிருந்து வருவதாகவும் லட்சுமிக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லி எதிரி வீட்டில் இருந்த லட்சுமியை சாப்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லி வாதி லட்சுமியை அழைத்து வந்துவிட்டதில் ஏற்பட்ட விரோதம் காரணமாக கடந்த 29.03.2023 ம் தேதி அதிகாலை 4.00 மணியளவில் வாதியை அவரது வீட்டிற்கு முன்பாக பொது இடத்தில் எதிரி ஏண்டா பரதேசி நீ ஏண்டா என் வீட்டுக்கு வந்தாய் தாயோழி என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், வழக்கின் வாதி கருப்புசாமி என்பவரை உருட்டு கட்டையால் அடித்து வாதி கருப்புசாமிக்கு தலையில் சிறிய காயத்தை ஏற்படுத்தியதாக எதிரி மீது பிரிவுகள் 294(b),324 இதசவின் கீழ்

காமநாயக்கன்பாளையம், காவல்நிலைய உதவிஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரி நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்பட்டது.

<u>**குற்றச்சாட்டின் சாராம்சத்தையும் குற்றச்சாட்டினையும் விவரித்தல்:**</u>

3)எதிரிக்கு போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),324 ன் கீழான குற்றச் சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டு பற்றி, விளக்கிகூறி வினவியபோது எதிரி குற்றத்தையும், குற்றச்சாட்டுகளையும் மறுத்து கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப் பட்டது.

4)அதன்படி, அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 வரை பட்டியலில் இடப்பட்டு, எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் வகையில், அ.சா.1 மற்றும் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் அ.சா.பொ.1 ம் குறியீடு செய்யப் பட்டுள்ளது.

<u>**5)அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் :**</u>

இவ்வழக்கானது திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், 1/754 நாதேகவண்டம் பாளையத்தை சேர்ந்த கருப்புசாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான் நாதேகவண்டம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருவதாகவும் அவருக்கு சுமார் 30 வருடத்திற்கு முன்பு துத்தாரி பாளையத்தை சேர்ந்த அருகாணி என்பவரை திருமணம் செய்து வைத்ததாகவும் தங்களுக்கு செல்வி என்ற பெண்குழந்தை உள்ளது பின்பு அ.சா.1 க்கும் அவரது மனைவி அருக்காணிக்கும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்துவிட்டதாகவும் பின்பு கொசவம்பாளையத்தை சேர்ந்த தண்டபாணி என்பவரின் மனைவி லட்சுமி என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு சுமார் 20 வருடத்திற்கு முன்பு

லட்சுமியையும் அவரது மகன் வெள்ளிங்கிரியை அ.சா.1 உடன் அழைத்து வந்து குடும்பம் நடத்தி வருவதாகவும் வெள்ளியங்கிரி ராஜ் என்ற பெண்ணை திருமணம் செய்து அ.சா.1 குடியிருக்கும் வீட்டின் சற்று வடக்கு பக்கம் தனியாக குடியிருந்து வருவதாகவும் தற்போது லட்சுமிக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அடிக்கடி லட்சுமி வெள்ளிங்கிரி வீட்டுக்கு செல்வார் அதேபோல் கடந்த 28.03.2023 ம் தேதி இரவு சுமார் 8.00 மணிக்கு லட்சுமி வெள்ளியங்கிரி வீட்டுக்கு சென்றதை அறிந்து அ.சா.1 வெள்ளிங்கிரி வீட்டுக்கு சென்று லட்சுமியை அழைத்தபோது வெள்ளிங்கிரி அம்மா இங்கே இருக்கட்டும் என சொன்னார் அ.சா.1 க்கு சாப்பாடு செய்யவேண்டும் என சொன்ன போது எதிரி என் அம்மா உனக்கு வேலைகாரியா என வாக்குவாதம் செய்தார் பின்பு லட்சுமி அ.சா.1 உடன் வரவே அவர்கள் இருவரும் குடியிருக்கும் வீட்டுக்கு வந்துவிட்டதாகவும் பின்பு சுமார் 4.00 மணிக்கு அ.சா.1 அவரது வீட்டின் முன்பு இருக்கும் கழிப்பறை அருகே உட்கார்ந்து இருந்தபோது வெள்ளியங்கிரி அ.சா.1 ன் வீட்டுக்கு வந்து என்னை ஏண்டா பரதேசி நீ ஏண்டா என் வீட்டுக்கு வந்தாய் தாயோழி என்று கேட்டபோது நீ எண்டா இப்படி பேசுகிறாய் என்று கேட்டு வெள்ளியங்கிரி அருகே சென்றபோது அவன் கையில் மறைத்து வைத்திருந்த உருட்டு கட்டையால் அ.சா.1 ன் தலையில் இடது முன்மண்டை மற்றும் இடதுபக்க பின்மண்டையில் அடித்து விட்டார் அ.சா.1 சத்தம்போடவே அதை கேட்டு வெள்ளியங்கிரி கட்டையை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் பின்பு அ.சா.1 வீட்டு வாசலில் படுத்து விட்டதாகவும் தலையில் ரத்தகாயம் ஏற்பட்டு இருந்தது பின்பு கோவிலுக்கு. சென்று இருந்த அ.சா.1 ன் தம்பி மகன் கார்த்தி வந்து அ.சா.1 ஐ பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் அங்கு முதலுதவி செய்து அ.சா.1 ஐ மருத்துவர் வீட்டுக்கு அனுப்பி விட்டதாகவும் காமநாயக்கன்பாளையம் போலீசார் அ.சா.1 ஐ வீட்டில் வந்து விசாரித்ததாக கூறியுள்ளார்.

6)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 மூர்த்தி, உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் கையெழுத்தும், கையொப்பமும் தனக்கு நன்கு பரிட்சையம் என்றும் வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிப்பதாகவும் கடந்த 29.02.2023 ம் தேதி முதல்நிலையகாவலர் மதன்குமார் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது

அம்மாசை மகன் கருப்பசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.2 புகாரை பெற்று காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.122/ 2023 சட்டப்பிரிவுகள் 294(b),324 இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் வழக்கினை உதவி காவல் ஆய்வாளர் குழந்தைவேல் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாதி கருப்புசாமி சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் சுதாகர் மற்றும் சாமிநாதன் ஆகியோர்கள் முன்ப பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அன்றே 8.30 மணிக்கு சுமார் 69.00 செ.மீ நீளமுள்ள உருட்டுகட்டை ஒன்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும் சாட்சிகள் கருப்புசாமி, சின்னசாமி, சுப்பிரமணியம், கார்த்திக், சுதாகர், சாமிநாதன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 07.04.2023 ம் தேதி 17.00 மணிக்கு நிலையம் ஆஜரானவரை கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்ததாகவும் இவ்வழக்கில் காயம்பட்ட கருப்புசாமிக்கு சிகிச்சை அளித்த பல்லடம் அரசு மருத்துவ மனை மருத்துவர் மதிவதனி அவர்களை விசாரித்து அ.சா.ஆ.7 விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 20.04.2023 ம் தேதி சட்டபிரிவுகள் 294(b), 324 இதசவின் கீழ் குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

**<u>கு.வி.மு.சபிரிவு 313(i)(b)ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில் :</u>**

7)அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய்சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப் பட்டது.

**<u>எதிரி தரப்பு வாதம் :</u>**

8)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 240 ன் கீழ் வினவியபோது, இவ்வழக்கு பொய் வழக்கு

என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார். மேலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்படும்போது, புகார்தாரரும் எதிரியும் சமரசம் பேசி சமாதானமாக சென்று வழக்கை முடித்துக்கொள்ள மனுஎண்.05/2026 25.03.2026 ம் தேதி தாக்கல் செய்துள்ளார். அம்மனுவானது அன்றே இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(i)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவிய போது, சாட்சிகள் அனைத்தும் பொய் சாட்சிகள் என்றும், எதிரி மீதான குற்றச் சாட்டினை அரசுதரப்பில் தகுநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

**<u>9) தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை :</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச் சாட்டுக்கள் போதுமான சாட்சிகள் கொண்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது? அ.சா.1 கருப்புசாமி, அவரது சாட்சியத்தில் சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு இரவ 8.00 மணியளவில் அவரது மனைவி லட்சுமி, வெள்ளியங்கிரி வீட்டிற்கு சென்றதாகவும் அ.சா.1 க்கும் எதிரிக்கு அடிக்கடி பிரச்சனை ஏற்படும் அன்று இரவ கூட்டமாக இருந்தது அந்த கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் அ.சா.1 நிலை தடுமாறி கீழே விழுந்து அ.சா.1 ன் பின்பக்க தலையில் அடிபட்டது அ.சா.1 ன் தம்பி மகன் கார்த்திக் பல்லடம் அரசு மருத்துமவனைக்கு அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்ததாகவும் சிகிச்சையில் இருந்தபோது காமநாயக்கன்பாளையம் போலீசார் கைரேகை வாங்கினார்கள் அதில் என்ன விவரம் இருந்தது என்று அ.சா.1 க்கு தெரியாது என்றும் அந்த கைரேகை மட்டும் அ.சா.ஆ.1 என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசுதரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

10)இவ்வழக்கு சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 போலீசார் விசாரணையின்போது, புகார்வாக்குமூலத்திலும் எதிரியின் குற்ற செயல் குறித்து சாட்சியம் அளித்து விட்டு தற்போது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியம்

அளித்துள்ள நிலையில் அ.சா.1 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை சாட்சியங்கள் மூலம் உறுதிப்படுத்தப் படவில்லை.

11)இதுகுறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் Madan Mohan Abbot vs. State of Punjab reported in (2008) 4 SCC 582 என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5 ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும் எதிரியும் சமாதானமாக செல்லும் போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு:

"....We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly over burdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."

12)இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சினை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்பந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுதரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்டமுடியாத நிலையில் புலன் விசாரணை அதிகாரி தவிர நிகர்நிலை புகார்தாரர் சாட்சி உள்ளிட்ட ஏனைய தனி நபர் சாட்சிகள் அரசுத் தரப்பு வழக்கை ஆதரிக்காமல் முரண் பட்டு பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதையும் காண முடிகிறது. இந்நிலையில் முன் தீர்ப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை சமாதானத்தினையும் பரிசீலனைக்கு கவனத்தில் எடுத்துக்கொண்டு இவ்வழக்கை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும் சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13)மேலும் அரசுத்தரப்பில் முன்னிடப்பட்டுள்ள இவ்வழக்கானது எதிரியின் பெயரை குறிப்பிட்டும், வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எழுந்துள்ள நிலையில், அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரிதான் வழக்கு சம்பவத்தில் ஈடுப்பட்டார் என்று எந்தவித சாட்சியமும் எதிரிக்கு எதிராக இடம்பெறாத நிலையில்

எதிரி மீதான குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14)வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து, இவ்வழக்கின் எதிரியை குற்றத்தோடு இணைக்கவோ, குற்றவாளி என முடிவு செய்யவோ இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரி மீது சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் குற்றம் நிரூபிக்கப்படாததால் எதிரிக்கு சந்தேகத்தின் பலனை அளித்து அவரை விடுதலை செய்யலாம் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15)முடிவில், எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழான குற்றச் சாட்டுகளில் இருந்து குற்றவாளி இல்லை என்றும் தீர்மானித்து குவிமுச 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16)இவ்வழக்கு சொத்தான அ.சா.பொ.1 சுமார் 69 செ.மீ நீளமும், 2.5 செ.மீ விட்டமும் கொண்ட உருட்டுக்கட்டை ஒன்று இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இந்நீதிமன்ற பி.ஆர்.எண்.54/2026 ஆக பி.ஆர் செய்யப்பட்டு நீதிமன்ற பொறுப்பில் உள்ளதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் பயனற்றது என கருதி அழிக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தப் பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.04.10 18:53:21 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 25.03.2026 திரு.கருப்புசாமி த/பெ. அம்மாசை –புகார்தாரர்

அ.சா.2 25.03.2026 திரு.மூர்த்தி, காவல் ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 29.03.2023 | புகாரில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2/அ.சா.2 | 29.03.2023 | புகார் |
| அ.சா.ஆ.3 /அ.சா.2 | 29.03.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4/அ.சா.2 | 30.03.2023 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5/அ.சா.2 | 30.03.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6/அ.சா.2 | 30.03.2023 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7/அ.சா.2 | 29.03.2023 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்கள் :</u>**

அ.சா.பொ.1 – சுமார் 69 செ.மீ நீளமும், 2.5 செ.மீ விட்டமும் கொண்ட உருட்டுக்கட்டை ஒன்று

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.04.10 18:53:28 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

<u>குறிப்பு :</u>

1) எதிரி ஆஜர் மற்றும் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.

3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4)வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

5)நகல் மாண்புமிகு திருப்பூர் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.